SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

018

# THIRD YEAR EXAMINATIONS IN BACHILOR OF ARTS (EXTERNAL)-2011/2012

HELD IN NOVEMBER / DECEMBER-2013

## TML 3.12 குறிப்பிட்ட பாட நூல்கள் II

## (PRESCRIBED TEXT – II)

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

Duration: **03 hours**

---

01. கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி, அடிக்கோடிட்ட தொடர்களில் நீர்காணும் நயத்தினையும் விளக்குக.

அ) யாயே கண்ணினும் கடுங்கா தலளே
எந்தையும் நிலனுறப் பொறாஅன் சீறடி சிவப்ப
எவனில குறுமகள் இயங்குதி என்னும்
யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின் ஓருயி ரம்மே
ஏனலங் காவலர் ஆனா தார்த்தொறுங்
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயன் கொண்மார்
குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரும்
நல்வரை நாட நீவரின்
மெல்லியல் ஒருந் தான் வாழளே.

ஆ) வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்
களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான் !
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி !

06. அடிநிலை மக்கள் தொடர்பான இலக்கியங்களுள் 'குறவஞ்சி' பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

07. திருவாசகத்தின் 'கோயில் மூத்த திருப்பதிகம்', 'கோயிற்பதிகம்' ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு மாணிக்கவாசகரின் பாடற் திறனை மதிப்பிடுக.

08. கலிங்கத்துப் பரணி 'போர் பாடியது' என்ற பகுதியினூடாக சயங்கொண்டாரின் கவியாற்றல் வெளிப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே ! <u>தொல்நிலைப்</u>
<u>பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட</u>
<u>சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது</u>
<u>ஆதல் நின்னகத்து அடக்கி</u>
<u>சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே</u>

இ) மனையுறை புறவின் செங்காற் சேவல்
இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணாது
இரவும் பகலு மயங்கி கையற்று
மதலைப் பள்ளி மாறுவன விருப்ப
கடியுடை வியனகர்ச் சிறுகுறுந் தொழுவர்
கொள்ளுறழ் நறுங்கற் பலகூட்டு மறுக
<u>கூந்தன் மகளிர் கோதை புனையார்</u>
<u>பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்ம்மார்</u>
தண்ணறுந் தகர முளரிநெருப் பமைத்து
இருங்கா ழகிலொடு வெள்ளயிர் புகைப்ப

02. அகநானூற்றுப் பாடல்களில் 'வரைவுகடாவுதல்' வலியுறுத்தப்படுமாற்றினை தெளிவுபடுத்துக.

03. புறநானூற்றில் பாரி மன்னனது வீரம், கொடை, புகழ் ஆகியன சித்திரிக்கப்படுமாற்றிலுள்ள சிறப்பினை விளக்குக.

04. 'நெடுநல்வாடை' கூறும் கூதிர்கால விளைவுகளை தொகுத்துரைக்குக.

05. ஒரு சிறந்த அமைச்சனுக்கு இருக்கவேண்டிய பண்புகளை வள்ளுவரின் அமைச்சியலை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.